பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 06 வியாழக்கிழமை 23.10.2025 | அதிர்வு 84

## வெள்ளவத்தையில் ரயில் மோதி ஒருவர் சாவு!

கொழும்பு, வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் பாணந்துறை யில் இருந்து புத்தளம் நோக்கிச் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சிறீதரனுக்கு எதிராக சபையில் சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டு

## எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு அரசுத் தரப்பைத்தான் ஆதரித்து வாக்களிக்கின்றாராம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எதிராக மற்றொரு எதிர்க் கட்சி உறுப்பினரான சாமர சம்பத் சமர்ப் பித்த நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டை அது பற்றி விசாரிக்கும் நாடாளுமன்றக் குழுவிடம் ஒப்படைப் பதற்கு சபாநாயகர் முடிவு செய்து இருக் கின்றார். 02



# போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கட்டாயம் தூக்கிலிடப்பட வேண்டும்!



## அது பாவம் அல்ல என்கிறார் சிறை ஆணையாளர்

பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குக் கட்டாயம் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாள ரும் சிறைச்சாலைகள் ஆணையாள ருமான ஜகத் வீரசிங்க தெரிவித்தார்.

நாவலப்பிட்டி பகுதியில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

# ‘வெலிகம லசந்த’ கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஓரிரு நாள்களில் கைதாகுவார்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகரவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் குறித்த முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் இன்று உரையாற்றும்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.



அதன்படி, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர நேற்று அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இருந்தபோது இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இன்று அதிகாலை வீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரயில் மோதி...

சென்ற ரயில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கறுப்பு நிற காற்சட்டை மற்றும் வெள்ளை மற்றும் நீல நிறச் சட்டை அணிந்துள்ளார் எனவும், சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சிறீதரனுக்கு...

அரசமைப்பு கவுன்ஸிலில் எதிர்க்கட்சிகளின் தரப்பில் பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியாக இருந்து கொண்டு, அங்கு எப்போதும் அரசுத் தரப்பை ஆதரித்துச் செயற்படுவதன் மூலம் எதிர்க்கட்சிகளின் சிறப்புரிமையை அவர் மீறியுள்ளார் என்று சாமர சம்பத் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்விடயத்தை ஒட்டி சிறீதரனுக்கு எதிராகச் சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டை புதிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த சாமர சம்பத் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தாராயினும் அதில் சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முழு விவரம் தெரிவிக்கப்படாத காரணத்தினால் அதனை நேற்று சபாநாயகர் ஏற்க மறுத்தார்.

சிறீதரனுக்கு எதிரான சிறப்பு உரிமை மீறல் விசாரணை தொடர்பான விடயங்களை திறந்த நாடாளுமன்ற அமர்வில் முன்வைத்து விவாதிப்பது அரசமைப்பு கவுன்ஸிலின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் பாதிக்கக் கூடும் என்பதாலும், நாடாளுமன்றத்தின் மரியாதையை குறைக்க கூடும் என்பதாலும் அது பற்றிய விடயங்களை சிறப்புரிமை மற்றும் நடத்தை நெறிமுறை தொடர்பாக விசாரிக்கும் குழுவில் முன்னால் தான் முன்வைக்க விரும்புகின்றார் என சாமர சம்பத் முதலில் தமது கோரிக்கையில் தெரிவித்திருந்தார்.

ஆனால், அந்த விவரங்களை சமர்ப்பிக்கும்படி சபாநாயகர் வலியுறுத்தியமையினால் அவற்றை சாமர சம்பத் இன்று எழுத்து மூலமாகச் சமர்ப்பித்தமையுடன் அது பற்றி சபையில் விவரித்தார். அதையடுத்து அந்தக் கோரிக்கையை ஏற்று, விடயத்தை சிறப்புரிமை மீறல் குழுவின் விசாரணைக்கு ஒப்படைக்கத் தான் முடிவு செய்தார் என சபாநாயகர் இன்று சபையில் அறிவித்தார்.

“நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு உள்ளது. அவருக்கு எதிரான விசாரணை நிலுவையில் உள்ளது. அத்தகையவர் நீதியரசர்கள், பொலிஸ்மா அதிபர் மற்றும் அது போன்ற முக்கிய பதவிகளுக்கு ஆள்களைத் தெரிவு செய்யும் அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம்பெற்றிருப்பது முறையற்றது. இயற்கை நீதிக்கு முரணானது” – என்றார் சாமர சம்பத்.

அது மாத்திரமல்ல, பிரதான எதிர்க்கட்சி தவிர, தமது கட்சி உட்பட ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசமைப்பு கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ள சிறீதரன், அங்கு முக்கிய நியமனங்களில் எப்போதும் அரசுத் தரப்போடு சேர்ந்து வாக்களிப்பதன் மூலம் தமது கட்சி உட்பட்ட அந்த எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை மீறிச் செயற்படுகிறார் என்று சாரப்பட பல குற்றச்சாட்டுகளை சாமர சம்பத் தமது சமர்ப்பணத்தில் முன் வைத்துள்ளார்.

“சிறீதரன் எனது மற்றும் எனது கட்சியின் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையை மட்டுமல்லாமல், பிரதான எதிர்க்கட்சிக்கு உட்படாத பிற எதிர்கட்சிகளின் உறுப்பினர்களின் நம்பிக்கையும் இழந்துள்ளார். அவரது நடத்தை அரசமைப்புக் கவுன்ஸிலில் உறுப்பினருக்கு தேவையான நம்பிக்கை, நேர்மை மற்றும் பாகுபாடின்றிச் செயல்படும் பண்புகளை பாதித்துள்ளது. எனவே, இது தெளிவாக சிறப்புரிமை மீறலாகவும் நடத்தை நெறிமுறை மீறலாகவும் அமைகின்றது. எனவே, இதனைச் சிறப்புரிமை மீறலாக அங்கீகரித்து, அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறுபான்மை எதிர்க்கட்சிகளுக்கு சரியான பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் வேறு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை அரசமைப்பு கவுன்ஸிலுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்” – என்றும் சாமர சம்பத் கூறியுள்ளார்.

அவரின் சமர்ப்பணத்தைப் பரிசீலித்த சபாநாயகர் அவரது குற்றச்சாட்டை நாடாளுமன்ற சிறப்புரிமை விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்து அது பற்றி சபையில் அறிவித்தார்.

### போதைப்பொருள்...

அவர் மேலும் உரையாற்றுகையில், “தூக்கிலிடப்படவுள்ள 805 ஆண்களும் 21 பெண்களும் உள்ளனர்.

தூக்கிலிடப்படவுள்ள 805 ஆண்களில் 5 பாடசாலை மாணவர்களும் அடங்கியுள்ளனர்.

தென் மாகாணம் தான் பாதாள உலக நடவடிக்கைகளில் முதலிடத்தில் உள்ளது. இவ்வளவு படித்த சமூகம் கூலிக்குக் கொலை செய்யும் சமூகமாக எப்படி மாறியுள்ளது என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

எப்படி பாரிய அளவில் போதைப் பொருட்களைக் கொண்டு வந்து இந்த நாட்டை அழிக்கும் நிலைக்கு அவர்கள் கொண்டு வந்தார்கள்.

இதற்கெல்லாம் மூல காரணம் இந்த நாட்டில் பாரிய அளவிலான போதைப் பொருள் கடத்தல்காரர்கள். அவர்கள் நிச்சயமாக தூக்கிலிடப்பட வேண்டும்.

ஏனென்றால் அவர்கள் ஒரு தேசத்தை அழிக்கின்றார்கள். எனவே, பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கட்டாயம் தூக்கிலிடப்பட வேண்டும். அது பாவம் அல்ல.” – என்றார்.





# கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியால் சாவு

**(பூ.லின்ரன்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக கடலில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணி பகுதியைச் சேர்ந்த துரைராசா நியூட்டன் (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று புதன்கிழமை இரவு தொழிலுக்காகக் கடலுக்குள் சென்றுள்ளார். இன்று அதிகாலை 3 மணியளவில், தனது மனைவிக்குத் தொலைபேசி ஊடாக தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அவரது மனைவி கடற்றொழில் சமாசத்துக்கு அறிவித்ததை அடுத்து, கரையில் இருந்து கடற்றொழிலாளர்கள் சிலர் கடலுக்குச் சென்று நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட மீனவரை மீட்டு கரை திரும்பினர்.

அவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளது

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீனவரின் இழப்பு அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பெக்கோ சமனின் மனைவிக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு!



பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "பெக்கோ சமனின்" மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவர் கடும் பாதுகாப்பு மத்தியில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெக்கோ சமனின் மனைவியுடன் தொடர்பில் இருந்தவர்களுக்குச் சொந்தமான 13 வங்கிக் கணக்குகளைத் தற்காலிகமாக முடக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 'கெஹெல்பத்தர பத்மே', 'கொமாண்டோ சலிந்த', 'பாணந்துறை நிலங்க', "பெக்கோ சமன்", பெக்கோ சமனின் மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பாதாள உலக கும்பலில் இருந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி ஓகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட "கெஹெல்பத்தர பத்மே" உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.எ

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கல்வி பற்றிய தீர்மானங்கள்

அடுத்த ஆண்டு முதல் அனைத்துப் பாலர் பாடசாலைகளுக்கும் ஒரே பாடத்திட்டக் கட்டமைப்பு அமுல்படுத்தப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி மறுசீரமைப்புக்கான நாடாளுமன்ற உபகுழுவின் கூட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளித்த பிரமர், 2026 முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்ட அமைப்பு நடைமுறைக்கு வரும் எனத் தெரிவித்தார்.

முன்பள்ளி கல்விக்கான பாடத்திட்டக் கட்டமைப்பு ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுமார் 19,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உத்தியோகபூர்வ பயிற்சித் திட்டம் 2025 நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் இதற்கான ஆசிரியர் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளமையுடன், புதிய பாடத்திட்ட கட்டமைப்பின்படி கற்பித்தல் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் பிரதமர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கல்வி அமைச்சர் என்ற முறையில் பிரதமரின் இந்த அறிவிப்பு நல்லதுதான். ஆயினும் அதிலும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சம் உள்ளது.

இதுவரை காலமும் பாலர் பாடசாலைக் கல்வி தொடர்பில் இலங்கை அரசு போதிய கவனமோ, ஈடுபாடோ, பங்களிப்போ செலுத்தவில்லை. தனியாரே பெரும்பாலும் அதனை முன்னெடுத்து வந்தனர். அங்கு பாடபோதனையில் ஈடுபடும் ஆசிரியர்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோருக்கு மாதாந்தம் சுமார் ஆறாயிரம் ரூபா பெயருக்குக் கொடுப்பனவு செய்ததைத் தவிர மத்திய அரசு காத்திரமான ஈடுபாட்டை இவ்விடயத்தில் காட்டவில்லை. இப்போதாவது சிரத்தை காட்ட முற்பட்டிருப்பது நல்லதுதான்.

ஆனால், பாடசாலை கல்வி முழுமையாக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயம். கல்விக் கொள்கை தொடர்பான அதிகாரம் 13 ஆம் திருத்தத்தின் கீழ் மத்திய அரசிடமே இருந்தாலும், மாகாண சபைகளை இயங்க வைக்காமல் முடக்கி வைத்துக் கொண்டு, அவை தொடர்பான கல்வி அதிகாரங்களையும் மத்திய அரசே தன் கைகளில் வைத்துக் கொண்டு, இத்தகைய முடிவுகளை ஒரு தலைப்பட்சமாக எடுப்பது பொருத்தமற்றது. இத்தகைய விடயங்களில் - குறிப்பாக பாலர் கல்வி போன்ற விவகாரங்களில் - அந்தந்த மாகாண சபைகளின் கருத்துக்களையும் மாகாண பிரதிநிதிகளின் நிலைப்பாடுகளையும் உள்வாங்கிக் கொள்கைத் தீர்மானங்களை மத்திய அரசு முன்னெடுப்பதுதான் சரியாக இருக்கும். மாகாண சபைகளை முடக்கி வைத்துக்கொண்டு, அவற்றின் கருத்துகளை உள்வாங்காமல், மத்திய அரசு தன்னிச்சையாக கையாள்வது பொருத்தமற்ற நடவடிக்கையாகும்.



# பாடசாலை மாணவர்களைப் புறக்கணித்த பொதுப் போக்குவரத்து பஸ் சேவை!

## நடவடிக்கை மேற்கொண்ட தவிசாளர் சசிகுமார்

**(வடிவேல் டினேஸ்)**

திருக்கோவில் பிரதேச சபைக்கு உட்பட்ட காஞ்சிரம்குடா பகுதியில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் அரச மற்றும் தனியார் பஸ்கள் ஏற்றாமல் புறக்கணிக்கப்பட்ட சம்பவம் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன என்று திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சு.சசிகுமார் தெரிவித்தார்.

ஏ4 பிரதான வீதியால் மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து சென்றாலும் சைக்கிள்களில் சென்றாலும் பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக தவிசாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நேற்று (22) புதன்கிழமை) இவ்வாறான சம்பவம் திருக்கோவில் காஞ்சிரம்குடா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 25 பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்ல திருக்கோவில் பொத்துவில் ஏ4 பிரதான வீதியில் பஸ்ஸை எதிர்பார்த்து நின்றபோது, பஸ் குறித்த மாணவர்களை ஏற்றாமல் சென்றுள்ளதால் பாடசாலை மாணவர்களால் நேற்று பாடசாலை செல்ல முடியவில்லை.

இது தொடர்பாக கவனம் எடுத்த தவிசாளர் சு.சசிகுமார் இன்று (24) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் பாடசாலை மாணவர்கள் பஸ்ஸை எதிர்பார்த்து நின்ற பிரதான வீதிக்கு சென்று பிள்ளைகளை பஸ்ஸில் ஏற்றும் முயற்சியில் களமிறங்கியுள்ளார்.

இதன் போது தனியார் பஸ் நடத்துனர் பாடசாலை மாணவர்களை ஏற்ற மறுப்பு தெரிவித்ததாகவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

இருப்பினும் தவிசாளருக்கும் நடத்துனருக்கும் இடையில் இடம்பெற்ற முறுகல் நிலையைத் தொடர்ந்து மாணவர்கள் குறித்த தனியார் பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண பேக்குவரத்து பிரிவின் கவனத்துக்குக் கொண்டு சென்று விரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

மேலும் தேவையற்ற விதத்தில் காஞ்சிரம் குடா பிரதான வீதியில் காணப்பட்ட பயணிகள் நிழல் குடை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

# புதிய செயலாளராக மஜீட் நியமனம்



**(வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை பிரதேச சபையின் பதில் செயலாளராக யூ.எல்.ஏ.மஜீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் முன்னிலையில் அவர் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னர் செயலாளராக இருந்த கிதிர் மொகமட் ஓய்வு பெற்றதன் விளைவாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் இந்தப் பதில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்களுக்குக் கௌரவிப்பு






(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்றுத் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றும் நான்கு உத்தியோகத்தர்களை விருது வழங்கி கௌரவித்த நிகழ்வு நேற்று (21) செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில், கல்லூரியின் நலன் புரிச்சங்கத்தின் தலைவரும், விரிவுரையாளருமான எஸ். சனீஜ் தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்லூரியின் அதிபர் ஏ. ஜனுர்டீன், விசேட அதிதிகளாக உதவி அதிபர் எம்.எம்.ஸஃபான், பதிவாளர் முஹம்மட் றகீப், கல்லூரியின் பகுதித் தலைவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்ததுடன் விருதாளர்களைப் பாராட்டியும் பேசினர்.

எம். எஸ். எம். பிஸ்றீன் மற்றும் ஏ. எச். எம். மிஸ்பர் ஆகியோர் மூன்றாம் நிலைக் கல்வி, வாழ்க்கை தொழில் கல்வி அமைச்சு மற்றும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்தும் Career-1 நிகழ்ச்சிதிட்டத்தில் சிறந்து விளங்கியமைக்காக தேசிய மட்டத்தில் விருது வழங்கி கௌரவித்தமைக்காகவும், எச். சஜீதா கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான பாடல் போட்டியில் வெற்றி பெற்று விருது பெற்றமைக்காகவும், எம். ஐ. எம். நாஸீர் கலாசார, மதவிவகார அமைச்சால் கலைஞர் சுவதம் விருது பெற்றமைக்காகவும் இவர்கள் விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பாராட்டை பெறுகின்ற நான்கு உத்தியோகத்தர்களும் அவர்களுடைய துறைகளிலும், அரச கடமையிலும் சிறப்பான முறையில் சேவை செய்பவர்களாகவும் உள்ளதோடு, இந்தக் கல்லூரிக்கு தொடர்ச்சியாக சகல விடயங்களிலும் பங்களிப்பு செய்து வருகின்றார்கள் என்று கல்லூரி அதிபர் தனதுரையில் தெரிவித்தார்.





# வற்றாப்பளையில் இயங்காத நிலையில் இருந்த சனசமூக நிலையம் புனரமைப்பு

(பா.சதீசன் )

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வற்றாப் பளை தெற்கு சனசமூக நிலையம், 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பல ஆண்டுகள் இயங்காத நிலையில் இருந்து வந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் குறித்த சனசமூக நிலையம் புனர மைக்கப்பட்டு நேற்று மாலை மக்களு டைய பாவனைக்காக மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத்தின் தலைவரும், செந்தமிழ் விளையாட்டு கழகத் தலை வருமான சதீஸ்கரனின் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக கரைதுறைப்பற்று சனசமூக நிலைய உத்தியோகத்தர் விக்ரர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா. ஜீட்சன், சிறப்பு விருந்தினராக புனரமைப்புக்கான நிதி பங்களிப்பை வழங்கி முன்னுதாரணமாக திகழ்ந்த புலம்பெயர் நாட்டில் வசிக்கும் வற்றாப்பளை சேர்ந்த செல்வராசா கலந்து கொண்டார்.

நிகழ்வில் கிராம மட்ட அமைப்பினர், விளையாட்டு கழக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு புனரமைக்கப்பட்ட சனசமூக நிலை யத்தைப் பார்வையிட்டு வேலைகளை ஆரம்பித்திருந்தனர்.





# முத்து நகர் விவசாயிகளின் போராட்டத்துக்கு முறையான தீர்வை அரசு வழங்க வேண்டும்!

## ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் விவசாய நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் விவசாய நில அபகரிப்புக்கு எதிராகத் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முத்து நகர் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து பிரச்சினையை அவசரமாகத் தீர்த்து வைக்க அரசு உடனடியாக முன்வர வேண்டும் என்று ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் பொருளாளர் பீ.எம். நினாப் அரசுக்கு கோரிக்கை முன்வைத்துள்ளார்.




ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரதமர் ஹரிணி அமர சூரிய வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நிரந்தர தீர்வை முன்வைத்து குறித்த போராட்டம் இடம்பெற்று வருகிறது. இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி எனக் கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி சூரிய மின்சக்தி உற்பத்திக்காகத் தனியார் கம்பெனிகளுக்கு தாரை வார்த்துள்ளதாக அங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டத்துக்கு வழங்கியதால் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். இவற்றுக்குத் தீர்வை வழங்கி மக்களுக்குச் சாதகமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டியது அரசின் கடமையாகும்.

கடந்த காலங்களில் அந்த மாவட்டத்தில் இருந்த எம்.பிக்கள் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்படக் காரணம். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான முழு பலமிக்க இந்த அரசு முத்துநகர் காணிகளை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முத்து நகர் காணிகள் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டது. வேறு வேறு பிரதேசங்களில் இருந்து வந்து இந்தக் காணிகளில் மக்கள் காலகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனாலும் அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 1984 ஆம் ஆண்டு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானது என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. அந்தக் காலப் பகுதியில் திருகோணமலை மாவட்ட 16 கிராம நிலதாரி பிரிவுகளை சேர்ந்த காணிகள் துறைமுக அதிகார சபைக்கு இதன் மூலம் சொந்தமாக்கப்பட்டுள்ளது. இப்படி இருந்த போதிலும் 1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இந்த முத்து நகர் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு விவசாய திணைக்களம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி அவர்களின் விவசாய நடவடிக்கையை மேம்படுத்த தேவையான சகல வசதிகளையும், சலுகைகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

கடந்த அரசுகள் விட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டியே இந்த அரசு மக்கள் ஆணையைப் பெற்றது. அதன் தொடர்ச்சியாகத் திருகோணமலை மாவட்ட அதிக முஸ்லிம் பிரதேசங்கள் முதன்முறையாக தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கினர். எனினும் துரதிஷ்டவசமாக அமைச்சரவை அமைச்சர் ஒருவர் முஸ்லிங்களுக்கு கிடைக்காமையால் அதனால் விரக்தியுற்ற மக்கள் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆணையை குறைத்து கொண்டார்கள். இந்த நிலைக்கு மக்களை தள்ளியதும், இந்த பிரச்சினையை முஸ்லிம் அரசியல்வாதிகள் கையிலெடுக்க காரணமும் அரசாங்கத்தின் போக்கே தவிர வேறில்லை.

3:2 பெரும்பான்மையை கொண்ட நாடாளுமன்றத்தையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் கொண்டுள்ள இந்த அரசு விவசாயம் செய்துவரும் முத்து நகர் காணிகளை மக்களுக்கு கொடுக்க விரும்பினால் கொடுக்கலாம். இதனை விவாதப்பொருளாக வைத்துகொண்டிராமல் மக்களின் பிரச்சினையை தீர்க்க அரசு உடனடியாக முன்வர வேண்டும். கடந்த கால ஏமாற்று அரசியல்வாதிகளை நிராகரித்தே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள். அவர்களே மக்களை வீதிக்கு வரவழைப்பது நியாயமில்லை. நாட்டையும், நாட்டு வளங்களையும் பாதுகாப்பதில் எப்போதும் அர்ப்பணிப்புமிக்க சமூகமான முஸ்லிம் சமூகம் இருந்து வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# அடம்பன் பாடசாலைக்கு குடி தண்ணீர் இயந்திரம்

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஊடாக அண்மையில் கிளிநொச்சி அடம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



சிவேஸ்வரன் என்பவருடைய நிதிப் பங்களிப்பில் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக உறுப்பினர்கள், பாடசாலை சமூகத்தினர் கலந்து கொண்டனர்.

# கிளிவெட்டியில் யானைகள் அட்டகாசம் பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டன!

(ஏ.எச்.ஹஸ்பர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிளிவெட்டி, குமாரபுரம் பகுதிகளுக்குள் புதன்கிழமை அதிகாலை (22) புகுந்த காட்டு யானைகள் பயன் தரும் மரங்களுக்கு சேதங்களை விளைவித்துள்ளன.

இதன்போது கிளிவெட்டி உப தபால் அலுவலக வளாகத்தில் இருந்த வாழை, தென்னை மரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குமாரபுரம் பகுதியில் காணப்பட்ட வாழை, தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கும் காட்டு யானைகள் சேதம் விளைவித்துள்ளன.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களையும் பயன்தரும் மரங்களுக்கு சேதம் விளைவிப்பதை தவிர்ப்பதற்கும் உரிய அரச அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கிளிவெட்டி பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# கற்பிட்டி தலவில் கடற்பரப்பில் கடத்தப்பட்ட 1416 கிலோ பீடி இலைகளை மீட்ட கடற்படை



(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி, தலவில் கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட சுமார் 1416 கிலோ பீடி இலைகளை இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை (21) கைப்பற்றினர்.

கற்பிட்டி, தலவில் கடல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் பிரிவு நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, கடலில் மிதக்கும் நாற்பத்தொரு (41) பைகள் பரிசோதிக்கப்பட்டன.

குறித்த நேரத்தில், கடற்படையினரின் நடவடிக்கைகளால் கரைக்குக் கொண்டு வர முடியாமல், கடத்தல்காரர்களால் கடலில் கைவிடப்பட்ட சுமார் ஆயிரத்து நானூற்று பதினாறு (1416) கிலோகிராம் பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர்.




கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகப் புத்தளம் கலால் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பரிசளிப்பு நிகழ்வு சம்மாந்துறையில்











**(நூருல் ஹுதா உமர்)**

சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் உள்ள நூலகங்கள் இணைந்து ஏற்பாடுசெய்த"மறுமலர்ச்சிக்காகவாசிப்போம்" எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு நிகழ்வு அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எழுத்தாளரும், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரியுமாக டாக்டர் நௌசாத் முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் வீ.வாஸித் அஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஹாதிக் இப்ராஹீம், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முபிஸால் அபூபக்கர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.பஸ்மிலா, சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.சுல்பா, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எல்.ஏ.மஜீட், நூலகர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதேவேளை, தெரிவு செய்யப்பட்ட சிறந்த வாசகர்கள் பொன்னாடை போர்த்தி, சான்றிதழ்களுடன் கௌரவிக்கப்பட்டனர்.

2025 ஆம் ஆண்டு தேசிய மற்றும் மாகாண ரீதியாக இலக்கியத் துறையில் விருது பெற்றவர்கள் குறித்த நிகழ்வில் நினைவுச் சின்னம் மற்றும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதன்போது, புத்தகக் கண்காட்சியில் பங்கேற்ற ஒவ்வொரு புத்தக நிலையங்கள் மற்றும் சமூக தொண்டு அமைப்புகளும் நூலகங்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் அன்பளிப்புச் செய்தனர்.



# கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்போருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பழவகை வழங்கல்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டை மனாறு சந்நிதியான் ஆச்சிரமத் தால் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்ப வர்களுக்கு முதலாம் நாளான நேற்று புதன்கிழமை 300 பேருக்கு பழ வகை பொதிகள் வழங்கிவைக்கப்பட் டன.

கந்த சஷ்டி விரதத்தில் தீர்த்த விரதம் இருப்போர் முந்நூறு பேருக்கே இவ்வாறு பழவகை பொதிகள் சந் நிதியான் ஆச்சிரம முதல்வர் கலா நிதி சாதனைத்தமிழன் செ.மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

விரதம் முடியும்வரை இந்த பழவகைப் பொதிகள் வழங்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.



கந்தசஷ்டிச் சிந்தனை



# தெள்ளு தமிழாய் விளங்குகிறான் கந்தன் !

## (2ஆம் நாள்)



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

மயிலில் ஏறி வருவான் கந்தன்
வள்ளியை அள்ளி அணைத்தான் கந்தன்
தெள்ளு தமிழாய் விளங்கிறான் கந்தன்
தெய்வானை உடனாய் இருப்பான் கந்தன்

அனைவரும் கந்தனை மனமதில் நினைக்க
கவசமாய் கந்த சஷ்டியைப் பிடிப்போம்
சஷ்டியைப் பிடித்தால் சகலதும் அகலும்
சஷ்டியே கந்தனின் இஷ்டமாம் விரதம்

பட்டினி கிடப்பது பக்குவம் கொடுக்கும்
சஷ்டியில் பட்டினி சகலதும் கொடுக்கும்
நீரும் அருந்தார் நினைப்பெலாம் கந்தனை
நினைத்துக் கொண்டே பிடிப்பார் விரதம் !

# உலகம் முழுவதும் போலியோ தினம்!

## ஒக்ரோபர் 24ஆம் திகதி



போலியோ (இளம்பிள்ளைவாதம்) குறித்த விழிப்புணர்வு அறிக்கை ஒன்றை அரச வேலை எதிர்பார்க்கும் சித்த மருத்துவர் சங்கத்தின் (Unemployed Union) குழந்தை நோயியல் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஒக்ரோபர் 24 ஆம் திகதி உலகம் முழுவதும் போலியோ தினம் (World Polio Day) கடைப் பிடிக்கப்படுகிறது. இந்த நாளின் நோக்கம் போலியோ குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட குழந்தைகளை மீள்நிலைக்குக் கொண்டுவருவ தாகும்.

போலியோ என்பது நரம்பு மண்டலத்தை கடுமையாக பாதிக்கும் வைரஸ் நோயாகும். இது குறிப்பாக குழந்தைகளில் ஏற்பட்டு, தசை பலவீனம் மற்றும் பக்கவாதம் போன்ற நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது. உலக போலியோ தினத்தை முன்னிட்டு, இந்த நோயின் பின்விளைவுகளுக்கு சித்த மருத்துவத்தில் கையாளப்படும் சிகிச்சை முறை கள் மற்றும் நாட்டில் கிடைக்கும் சித்த மருத்துவ சேவைகள் குறித்து தெரிவிக்க வேண்டிய கடமைப் பாடு எமக்குள்ளது.

தடுப்பூசி (Polio Vaccine) மட்டுமே இந்த நோயிலிருந்து முழுமையான பாதுகாப்பை அளிக்கும் ஒரே வழி. தடுப்பூசி மூலம் இந்த நோயை முற்றி லுமாக தவிர்க்க முடியும்.

நரம்பு செயல்பாட்டை மேம்படுத்தவும், நோயாளி கள் மீண்டுவரவும் சித்தமருத்துவம் முக்கிய பங் காற்றுகிறது.

போலியோ, வாத நோய் வகையைச் சேர்ந்தது. வாதம் பாதிக்கப்படுவதால் நரம்பு, தசை, மூட்டு மற்றும் அதன் இயக்கங்கள் பாதிக்கப்படுகிறதன.

உள் மருந்துகளான வாத குளிகை, மஹாவல்லாதி குளிகை, அசுவகந்தா லேகியம், அமுக்கரா சூரணம், மற்றும் பல மருந்துகள் உடல் வலிமை மற்றும் நரம்பு சக்தியை மேம்படுத்தும். மருந்தின் வகை, அளவை மருத்துவரே தீர்மானிக்க வேண்டும்.

வெளிப்புற சிகிச்சைகளாக அப்பியங்கம், பிச்சு, லேபனம், சுவேதனம் மற்றும் பஞ்சகர்ம சிகிச்சை களான நசியம் (Nasyam), வஸ்தி போன்ற சிகிச் சைகள் – நரம்பு செயல்பாட்டைத் தூண்டுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. சித்த மருத்துவத்தில் போலியோவுக்கு 21 நாள் சிகிச்சை திட்டம் மூலமாக சிகிச்சை வழங்கப்படுகிறது

பெற்றோர்கள் வாதத்தை அதிகரிக்கும் உணவுகள், குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்து வழங்க வேண்டும். யோகாசனங்கள் மற்றும் சீரான உடற் பயிற்சிகளும் மீள்நலத்துக்கு உதவுகின்றது. இவ் வாறான சிகிச்சை முறைகள் மூலம் நரம்பு மற்றும் தசை சக்தி அதிகரிப்பது, உடல் வெப்ப நிலை சீராவது, பக்கவாதம் மற்றும் பலவீனம் குறைவது, மேலும் நிம்மதியான உறக்கம் கிடைப்பது போன்ற பலன் கள் கிடைக்கும்.

இலங்கையில் பொது மக்களுக்குத் தரமான சித்தமருத்துவ சேவைகளை வழங்கும் பல முக்கிய மான மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவை தேசிய, மாகாண, மாவட்ட, ஆதார, தள மற்றும் கிராமிய மட்டங்களில் இயங்கி வருகின்றன. நாட்டில் தற்போது கீழுள்ள வைத்தியசாலைகள் சித்த, ஆயுர்வேத மற்றும் யூனானி மருத்துவப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. பொரளை தேசிய ஆயுள்வேத வைத்தியசாலை, கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, கைதடி சித்த போதனா வைத்தியசாலை, கோணேச புரி சித்த போதனா வைத்தியசாலை, மஞ்சந் தொடுவாய் மற்றும் நிந்தவூர் யூனானி ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, பல்லேகலை, தியத்த லாவ, அனுராதபுரம் மாகாண ஆயுர்வேத வைத் தியசாலை, இரத்தினபுரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாகாண ஆயுள்ளளளளளளளளளளவேத வைத் தியசாலை, டீ.பீ. வெலகெதர மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, கல்முனை, மொல்லிகொட, மின் னேரியவில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத் தியசாலை. ஓந்தாச்சிமடம், கப்பல்துறை, மாதம்பே, ஏறாவூர், மட்டக்களப்பின் புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவின் புதுக்குடியிருப்பு ஆகிய ஆதார வைத்திய சாலைகள், தள வைத்தியசாலைகளான மன்னார், வவுனியா, அச்சுவேலி, கிளிநொச்சி, கொத்மலை, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகளான நேபட, வீதியகொட, கோபாலபுரம், பண்டத்தரிப்பு, கொடி காமம், பன்விலை, நில்தண்டாஹின்ன, தொலுவ, நாரம்மல, நெதலகமுவ, வாரியபொல, அம்பன் பொல, முருதென்கே, நோர்த் மாத்தளை, தென்ன, கெலிஓய, தொலுவ ஆகிய இடங்களிலும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. ஒவ்வொரு பிரதேச சபைகளின் கீழும் இயங்கும் இலவச சுதேச மருத்துவமனைகள் வழியாகவும் பொதுமக்கள் தரமான சிகிச்சைகளை இலவசமாகப் பெறமுடியும்.

எனினும், இந்தச் சேவைகள் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் பலர் இதன் முழுப் பயனையும் பெற முடியாமல் இருப்பது குறிப் பிடத்தக்கது.

சித்த, ஆயுள்வேத மற்றும் யூனானி மருத்துவ முறைகள் பல நாட்பட்ட நோய்களுக்கும், நரம்பு மண்டல பாதிப்புகளுக்கும் பயனுள்ள மாற்று சிகிச்சை முறைகளை வழங்குகின்றன.

போலியோ பின்விளைவுகளுக்கான மீள்நலம் உள்ளிட்ட பல்வேறு நிலைகளுக்கு சித்த மருத்துவ முறைகள் உதவியாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லையென சித்த மருத்துவர் சங்கத்தின் குழந்தை நோய்ப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

**- மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள் -**

## ட்ரம்புடன் சந்திப்பு இல்லை;

# ஆசியன் உச்சி மாநாட்டினை தவிர்க்கின்றார் பிரதமர் மோடி

ஆசியான் உச்சி மாநாட்டில் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்கும் பிரதமர் நரேந்திர மோடியின் முடிவை மதிப்பதாக மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியா, மலேசியா, கம்போடியா, புருனெய், லாவோ பிடிஆர், மியான்மர், பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் அமைப்பின் 47-வது உச்சி மாநாடு மலேசிய நாட்டின் தலைநகர் கோலாலம்பூரில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இந்த உச்சிமாநாட்டில் ஆசியான் கூட்டமைப்பு சார்பில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன.

இதில், கலந்து கொள்வதற்காக அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு முக்கிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இரண்டு நாள் பயணமாக மலேசியாவுக்கு செல்ல இருக்கிறார்.

இந்நிலையில், இந்த உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக கலந்து கொள்ள இருக்கிறார். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"எனது அன்பு நண்பர் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் அன்பான உரையாடல் நடத்தினேன். ஆசியான் அமைப்புக்கு மலேசியா தலைமை வகிப்பதற்கு வாழ்த்து தெரிவித்தேன். மேலும், ஆசியான் உச்சி மாநாடு வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தேன்.

ஆசியான் - இந்தியா உச்சி மாநாட்டில் காணொலி காட்சி வாயிலாக இணைவதையும், ஆசியான் - இந்தியா இடையேயான விரிவான மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தப்படுவதையும் எதிர்நோக்குகிறேன்." என தெரிவித்துள்ளார்.



முன்னதாக அன்வர் இப்ராஹிம் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"மலேசியா - இந்தியா இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து விவாதிக்க பிரதமர் நரேந்திர மோடியிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. தொழில்நுட்பம், கல்வி, பிராந்தியப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பு உள்ளது. வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் இந்தியா, மலேசியாவுக்கு முக்கிய பங்காளியாக உள்ளது.

இந்த மாத இறுதியில் கோலாலம்பூரில் நடைபெற உள்ள 47 ஆவது ஆசியான் உச்சி மாநாட்டின் ஏற்பாடுகள் குறித்தும் நாங்கள் பேசினோம். அதேநேரத்தில், இந்தியாவில் தீபாவளி கொண்டாட்டங்களைக் கருத்தில் கொண்டு அவர் காணொலி காட்சி வாயிலாகக் கலந்து கொள்வதாக அறிவித்தார். அவரது இந்த முடிவை நான் மதிக்கிறேன். மேலும், அவருக்கும் இந்திய மக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலேசியா - இந்தியா இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கும், அமைதியான மற்றும் வளமான பிராந்தியத்தை நோக்கிய ஆசியான் - இந்தியா இடையேயான ஒத்துழைப்பைமேலும்மேம்படுத்துவதற்கும் மலேசியா தொடர்ந்து உறுதிபூண்டிருக்கும்." என தெரிவித்துள்ளார்.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடனான நேரடி சந்திப்பை தவிர்க்கும் பொருட்டே இந்த உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி நேரடியாக பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியாவுக்கு எதிராக கூடுதல் வரி விதிப்பு, இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை எதிர்ப்பது உள்ளிட்ட அமெரிக்காவின் நடவடிக்கைகளே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.

இஸ்ரேல் - காசா இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்காக எகிப்தில் கடந்த வரம் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பையும் பிரதமர் மோடி ஏற்கவில்லை. அவருக்குப் பதிலாக வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய தொலைக்காட்சி தொடரில் சிறப்புத் தோற்றத்தில் பில் கேட்ஸ்

பிரபல ஹிந்தி நடிகையும், அரசியல்வாதியும், தொலைக்காட்சி தயாரிப்பாளருமான ஸ்மிருதி இரானி நடிக்கும் பிரபலமான ஹிந்தித் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் மைக்ரோசொஃப்ட் நிறுவுனரும், உலக செல்வந்தருமான பில் கேட்ஸ் சிறப்பு தோற்றத்தில் இடம்பெறவுள்ளார்.

'க்யூங்கி சாஸ் பி கபி பஹு' தி 2' என்ற இந்த தொடரில் பில் கேட்ஸ் சிறப்பு விருந்தினராக காணொலி அழைப்பு மூலம் மூன்று அங்கங்களில் அவர் தோன்றவுள்ளார் என ஸ்மிருதி இரானி உறுதிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து ஸ்மிருதி இரானி கூறுகையில்,



"இந்திய பொழுதுபோக்குத் துறைக்கு இது ஒரு முக்கியமான தருணமாகும். பெண்கள் மற்றும் சிறுவர்களின் உடல் நலம் பற்றி அதிக அளவில் பேச இந்தத் தொடர் ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பச்சிளங் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இந்தச் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளதால், இந்த ஒத்துழைப்பு இயற்கையாகவே நடக்கிறது.

எனவே, சமூக விழிப்புணர்வை உருவாக்க எனது தொடரைப் பயன்படுத்துவதற்கு விரும்புகின்றேன்." என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடர் வயதாவதால் ஏற்படும் சவால்கள், உடல் கேலி, குடும்ப வன்முறை குறித்த தவறான வழக்குகள் போன்ற சமூகப் பிரச்சினைகள் குறித்தும் பேசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நைஜீரியாவில் எரிபொருள் கொள்கலன் வெடித்து சிதறியதில் 39 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின் லகோஸ் மாகாணத்திலிருந்து நைஜர் மாகாணத்திற்கு அருகில், எரிபொருள் கொள்கலன் ஒன்று வெடித்துச் சிதறியதில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நைஜீரியாவின் லகோஸ் மாகாணத்திலிருந்து நைஜர் மாகாணத்திற்கு எரிபொருள் கொள்கலன் ஒன்றில் நேற்று எரிபொருள் கொண்டு செல்லப்பட்டது.

நைஜர் மாகாணத்தின் கட்சா பகுதியில் உள்ள வீதியில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கொள்கலன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால் அந்த கொள்கலனில் இருந்த எரிபொருள் கசிந்து வெளியேறியது.

அப்போது ஏற்பட்ட தீ விபத்தில் எரிபொருள் பாரவூர்தி வெடித்துச் சிதறியது.

இந்தச் சம்பவத்தில் வீதியோரம் நின்றுகொண்டிருந்தவர்கள், வாகனங்களில் பயணித்தவர்கள் என 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 60 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.










# தென் கொரியாவின் மீது வட கொரியா நவீன ஏவுகணைகளை ஏவி பரிசோதனை

## ட்ரம்ப் வருகைக்கு மத்தியில் பதற்றம்

தென் கொரியாவில் அடுத்த வாரம் நடைபெற உள்ள ஆசிய - பசிபிக் பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கலந்துகொள்ள உள்ள நிலையில், வட கொரியா அதி நவீன ஏவுகணைகளை ஏவி பரிசோதனை செய்துள்ளது.

உலக நாடுகளின் வர்த்தகப் பொருளாதாரத் தடைகளை மீறி, வடகொரிய இராணுவம் அதி நவீன ஏவுகணைகளைத் தயாரித்து சோதனை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் வடகொரியா இராணுவம், கொரிய தீபகற்பத்தின் கிழக்குக் கடற்கரையை நோக்கி அதி நவீன ஏவுகணைகளை வானில் ஏவி பரிசோதனை செய்துள்ளதாக தென்கொரியா குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, ஆசிய - பசிபிக் பொருளாதார மாநாட்டின் போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் தென் கொரியாவின் ஜனாதிபதி லீ ஜே முங் ஆகியோரை, ட்ரம்ப் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களுக்கு தடை விதித்த அமெரிக்க அரசாங்கம்

உக்ரைனில் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்த மொஸ்கோவிற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக, ரஷ்யாவின் இரண்டு பெரிய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயில் மீது, அமெரிக்கா புதிய தடைகளை அறிவித்துள்ளது.

தான் புடினுடன் பேசும் ஒவ்வொரு முறையும், சிறந்த உரையாடல்களே நடத்தப்படுகின்றன.

எனினும், புடின் அடுத்த கட்டத்துக்கு நகர மறுக்கின்றார் என ட்ரம்ப் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹங்கேரியின் புடாபெஸ்டில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் திட்டமிடப்பட்டிருந்த சந்திப்பு, காலவரையின்றி ஒத்திவைக்கப்படும் என்று ட்ரம்ப் கூறிய மறு நாளே இந்தத் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, ரஷ்யா நேற்று உக்ரைன் மீது கடுமையான குண்டு வீச்சை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர்.



இந்த நிலையில், அர்த்தமற்ற இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர புடின் மறுத்ததால் புதிய தடைகள் தேவை என்று அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் கூறியுள்ளார்.

தடை செய்யப்படும் எண்ணெய் நிறுவனங்கள் கிரெம்ளினின் போர் இயந்திரத்திற்கு நிதியளிப்பதாகவும் அவர் கூறினார்.

கொலைகளை நிறுத்தும் வகையில் உடனடி போர் நிறுத்தத்திற்கான நேரம் இது என்றும் பெசென்ட் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, இந்தத் தடைகள் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்த உதவும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பக்கம் 03

# கனடா முரசு

வியாழக்கிழமை 23/10/2025

ஒட்டாவாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தட்டம்மை நோயினால் பாதிப்பு



03




# அமெரிக்காவுடன் நீடித்துவந்த பொருளாதார உறவு முடிந்தது

## கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவிப்பு

பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்தது என்று கனடா பிரதமர் கூறியுள்ளார். கனடா பிரதமரான மார்க் கார்னி, நேற்று புதன் கிழமை ஒட்டாவா பல் கலைக்கழக மாணவர் மத்தியில் உரையாற்றினார்.


அப்போது அவர், பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்தது என்று கூறினார். 02



# கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திக்கிறார் எதிர்க்கட்சி தலைவர்

கனடா பிரதமர் மார்க் கார்னி எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லிவ்ரே உடன் தனிப்பட்ட சந்திப்பு நடத்தவுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பு, எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. 02




# கனடா - அமெரிக்கா இடையிலான பயணங்கள் 30 வீதத்தினால் வீழ்ச்சி

அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு திரும்பிய கனடிய பிரஜைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 30 வீதத்தினால் குறைந்துள்ளது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த புதிய தரவுகளை வெளியிட்டுள்ளது. இது, 2006ஆம் ஆண்டிலிருந்து மூன்றாவது முறையாக அமெரிக்கர்களின் கனடா பயணங்கள், கனடியர்கள் அமெரிக்கா பயணித்தை விட அதிகமாக இருந்ததைக் குறிக்கிறது.

இதற்கு முன் இதே நிலைமை 2021 செப்டம்பர் மாதத்தில், கொவிட்-19 காலத்தில் மட்டுமே ஏற்பட்டது. அமெரிக்க குடியிருப்பாளர்களின் கனடா வருகைகளும் தொடர்ந்து ஏழாவது மாதமாக குறைந்துள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 1.4 வீதம் குறைவு பதிவாகியுள்ளது.

2025 ஓகஸ்ட் மாதத்தில் வாகன வழியாக கனடாவிற்கு வந்தவர்களின் எண்ணிக்கை 2024 ஓகஸ்ட்டுடன் ஒப்பிடும்போது 3.2 வீதம் குறைந்தது.

அமெரிக்கா - கனடா பயணங்களில் குறைவு ஏற்பட்டுள்ள போதிலும், வெளிநாடுகளில் இருந்து திரும்பிய கனடியர்களின் எண்ணிக்கை 9.2 வீதமாக உயர்ந்துள்ளது.

குறிப்பாக ஐரோப்பா மற்றும் ஆசியா பகுதிகளில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கையே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும்.

---

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக, கார்னி பல்கலைக்கழக மாணவர் குழு மத்தியில் உரையாற்றினார்.

இவ்வுரை, அவரது லிபரல் அரசாங்கத்தின் முதல் வரவுச் செலவுத் திட்டத்தை முன்னிட்டு எடுக்கப்படவுள்ள கடினமான தீர்மானங்களை விளக்குவதாக அமைந்தது.

நவம்பர் 4 அன்று சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த வரவு செலவுத் திட்ட செலவுக் கட்டுப்பாடுகள் மற்றும் சில முக்கிய புதிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறவுள்ளதாக அரசு முன்கூட்டியே அறிவித்துள்ளது.

தற்போது அமெரிக்கா விதித்துள்ள சுங்க வரிகளால்சி கனடாவின் பொருளாதாரம் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதனால் அரசாங்கம் நிதி திட்டமிடலில் கூடுதல் கவனத்தை செலுத்துகிறது.

மேலும், கார்னி இந்த வாரம் ஆசியாவில் நடைபெறும் பல பொருளாதார உச்சி மாநாடுகளில் கலந்துகொள்ளவுள்ளார். இவை நவம்பர் 4 வரவு செலவுத் திட் டத்திற்கு முன் நடைபெறவுள்ளன.

---

## அமெரிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், அமெரிக்கா அல்லாத பிற நாடுகளுக்கு செய்யப்படும் ஏற்றுமதி அடுத்த பத்து ஆண்டுகளில் இருமடங்காக அதிகரிக்கப்படும் என்றும், அதே நேரத்தில் உள் நாட்டு முதலீடும் உள் கட்டமைப்பும் வரும் வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்படும் எனவும் மார்க் கார்னி கூறினார் .

பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்ததன் விளைவாக, அமெரிக்காவுடன் நெருக்கமாக இருந்ததால் நமது வலிமை என கருதப்பட்ட பல விடயங்கள் இப்போது நமது பலவீனங்களாக மாறிவிட்டன என்றும் அவர் கூறினார்.

மேலும், உண்மையாகக் கூறி னால், அடுத்த சில மாதங்களுக்குள் எளிதாக நமது பொருளாதாரத்தை நம்மால் மாற்றிவிட முடியாது. அதற்கு கொஞ்சம் காலமும் எடுக்கும், அத்துடன், கனேடியர்கள் அதற்காக சில தியாகங்களையும் செய்ய வேண்டியிருக்கும் என்றும் மார்க் கார்னி தெரி வித்துள்ளார்.



# கனடாவில் அதிகளவு இளைஞர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவதில்லை

## புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிக்கை

கனடாவில் ஐந்து இளைஞர்களில் நான்கு பேர் பரிந்துரைக்கப்பட்ட அளவு உடற்பயிற்சியில் ஈடுபட வில்லை என கனடிய புள்ளிவிப ரவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

சமூக வலைதளங்களும் திரை நேரமும் (screen time) இளைஞர்களின் உடற்பயிற்சியை மேலும் தகர்க்கும் நிலைக்கு செல்லும் என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

2022 முதல் 2024 வரையிலான தர வின்படி, 12 முதல் 17 வயதுக்குள் உள்ள இளைஞர்களில் வெறும் 21 சதவீதமானவர்கள் உடற்பயிற்சி பரிந்துரைகளை பின்பற்றியுள்ளனர்.


இதே வயது பிரிவில் 2018-2019 காலத்தில் 36 சதவீதம் பேர் சுறு சுறுப்பாக இருந்தனர். அதாவது, இளம்வயது குழுவே மிகக் கடுமை யான வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

“அதிகம் உடற்பயிற்சி செய்யும் குழந்தைகள் உடல் ஆரோக்கியம், மனநலம், எலும்பு வலிமை, கல்விச் சாதனை என எந்த துறையிலும் சிறப்பாக செயல்படுகிறார்கள்,” என பிரின்ஸ் எட்வர்ட் தீவுப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் டிராவிஸ் சாண்டர்ஸ் கூறியுள்ளார்.

5 முதல் 17 வயது குழந்தைகள் தினமும் குறைந்தது 60 நிமிடங்கள் மிதமான அல்லது தீவிரமான உடற் பயிற்சி செய்ய வேண்டும். மேலும், ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது மூன்று நாட்கள் தீவிரமான மற்றும் தசை வலிமை அதிகரிக்கும் பயிற் சிகள் சேர்க்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முன்பள்ளி குழந்தைகளில் 90 வீதம் பேர் தேவையான அளவு இயக் கத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் 5 முதல் 11 வயது குழுவில் இது 50 வீதமாக குறைகிறது என சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

# ஒட்டாவாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தட்டம்மை நோயினால் பாதிப்பு



கனடாவின் ஒட்டாவாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் தட்டம்மை நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இரண்டு தேவாலயங்களில் சின் னம்மை தொற்று அபாயம் ஏற்பட் டிருக்கலாம் என்று பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஒட்டாவா பொதுச் சுகாதார அலுவலகம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சின்னம்மை நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர். இவர்கள் அனை வரும் ஒட்டாவா நகரைச் சேர்ந்தவர் கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்பு விவரங்கள் கிடைக்கும் இடங்களில், சின்னம்மை வைரஸுக்கு உட்பட்டிருக்கக் கூடிய நபர்களுக்கு நேரடியாக தகவல் தெரிவிக்கப்படு கிறது என ஒட்டாவா சுகாதார அதி காரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த பொது அறி விப்பு, நேரடியாக தொடர்பு கொள்ள முடியாதவர்கள் அல்லது தொடர்பு விவரங்கள் முழுமையற்றவர்களுக் காக வெளியிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி போட்டிருந்தாலும், தொற்று ஏற்பட்டிருக்கக்கூடிய நாளில் இருந்து 21 நாள்கள் வரை அறிகுறிகள் தோன்றுகிறதா என கவனிக்க வேண் டும் என அறிவித்துள்ளனர்.

உயர் காய்ச்சல், இருமல், மூக்கில் நீர் வடிதல், வாயில் வெள்ளை தழும் புகள், கண்களில் சிவப்பும் ஒளி உணர்வும் ஆகியவை முதன்மையான அறிகுறிகளாகும்.

அறிகுறிகள் பொதுவாக 7 முதல் 12 நாள்களுக்குள் தோன்றலாம், சில சமயம் 21 நாள்கள் வரை தாமதமா கவும் தோன்றலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.